**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C.491/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 28.11.2025.**

| | |
|---|---|
| **Name : அர்ச்சனா தேவி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் கரட்டு காட்டில் குடியிருந்து வீட்டில் தான் இருக்கிறேன். எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமான பிரச்சனை இருக்கிறது. 26.04.2025 ம் தேதியில் மதியம் 12 மணி அளவில் என் வீட்டின் அருகே உள்ள பழைய வீட்டை இடித்து மண்ணை அளக்கும் போது எதிரிகள் 4 பேரும் என்னை தேவிடியா, கண்டாரஓலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி செல்வராஜ், முருகன் இருவரும் என்னுடைய இரண்டு கையையும் பிடித்து கொண்டார்கள் சுப்ரமணி ஊதுகோலால் என்னுடைய இடதுகை முழங்கைக்கு மேலும், தலையிலும் அடித்தார்கள்.

2) ராணி என்னுடைய வலது கையில் முழங்கைக்கு மேல் ஊதுகோலால் அடித்தார். முருகன் என்னை கையால் முதுகில் அடித்தார். அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்து எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். வேலைக்கு சென்றிருந்த எனது கணவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவர் வந்து ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலிசார் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். நான் சொன்னதை எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து

என்னுடையது தான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஊதுகோலால் தான் எதிரிகள் என்னை அடித்தனர். ஊதுகோல் **சா.பொ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) ஓமலூர் அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் 3 நாட்கள் இருந்தேன். சா.பொ.1 யை நான் போலிசாரிடம் அடையாளம் காட்டினேனா என்றால் காட்டினேன். என்று எங்கு வைத்து அடையாளம் காட்டினேன் என்றால் 10.05.2025 ம் தேதியன்று நான் சான்று பொருளை அடையாளம் காட்டினேன். எங்கு வைத்து அடையாளம் காட்டினேன் என்றால் என் வீட்டில் வைத்து அடையாளம் காட்டினேன். நான் அடையாளம் காட்டும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் சௌந்தர்யா, பாக்கியவதி, சின்னதம்பி, சரோஜா, மாரியம்மாள் ஆகியோர் இருந்தார்கள்.

4) யார்யார் கைப்பற்றும் போது இருந்தார்கள் என்றால் மாரியப்பன், சின்னதம்பி ஆகியோர் இருந்தார்கள். மண் கொட்டியிருந்த இடம் யாருக்கு சொந்தமான இடம் என்றால் அது புறம்போக்கு இடம், அதை நாங்கள் உபயோகித்து கொண்டு இருக்கிறோம். நான் சொல்வது போல் நான் அடையாளம் காட்டி போலிசார் சான்று பொ ருளை கைப்பற்றவில்லை என்றாலும், சாட்சிகள் முன்பு சான்று பொருளை கைப்பற்றியிருந்தால் நீதிமன்றத்தில் கைப்பற்றுதல் மகஜரை தாக்கல் செய்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. என் முன்பாக சான்று பொருளை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றாத காரணத்தினால் தான் நீதிமன்றத்தில் கைப்பற்றுதல் மகஜரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5) எனது வீட்டிற்கும், எதிரி சுப்ரமணி வீட்டிற்கும் இடையே சந்து உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சந்தில் தான் மண் கொட்டிவைத்திருந்தது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த சமயத்தில் யார் யார் இருந்தார்கள்

என்றால் நான் மற்றும் பாக்கியவதி, சௌந்தர்யா மற்றும் 4 எதிரிகளும் இருந்தார்கள். சௌந்தர்யா என்பவரது வீடு எனது வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் உள்ளது என்றால் வீடு தொலைவில் உள்ளது, ஆனால் காடு பக்கத்தில் உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்று விசாரித்தார்கள் என்றால் 10.05.2025 ம் தேதியன்று எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

6) மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் எனது கணவருடன் சென்றேன். ஊதுகோலில் அடித்ததால் எனக்கு வெளிக்காயம் ஏற்பட்டதா என்றால் வீக்கம் ஏற்பட்டது. எங்கெங்கு வீக்கம் ஏற்பட்டது என்றால் தலையில் மற்றும் இடது கை முழங்கையில் வீக்கம் ஏற்பட்டது. நான் சொல்வது தவறு எ ன்றாலும், மருத்துவர் அவருடைய மருத்துவகுறிப்பில் எந்தவிதமான வெளிக்காயமோ, வீக்கமோ இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) நான் சொல்வது போல் எதிரிகள் ஊதுகோலால் அடித்திருந்தால் கண்டிப்பாக வெளிக்காயம் ஏற்பட்டிருக்கும் என்றும், நான் வழக்கிற்காக தவறுதலாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பாக்கியவதி மற்றும் சௌந்தர்யா ஆகியோர் சம்பவத்தை நேரடியாக பார்த்தாக நான் சொல்லியுள்ள நிலையில் அவர்கள் சம்பவத்தின் போது சண்டையை தடுக்கவில்லையா என்றால் அவர்கள் தூரத்தில் அவர்களது காட்டில் இருந்தார்கள். சம்பவ இடத்திலிருந்து மேற்சொன்ன இரண்டு நபர்களின் காடுகள் எவ்வளவு தொலைவு என்று சொன்னால் 10 அடி தொலைவு இருக்கும். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் மேற்சொன்ன இரண்டு நபர்களின் காடு எங்கு உள்ளது என்று குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் பாக்கியவதி என்வரின் காடு காட்டப்பட்டுள்ளது. சௌந்தர்யா என்பவரது காடு வரைபடத்தில் காட்டப்படவில் லை. நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில் லை என்றாலும், 3, 4 எதிரிகள் எனது கையை பிடித்து கொள்ளவில் லை என்றாலும், 1ம் எதிரி என்னை ஊதுகோலால் என்னை அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளின் நிலத்தை நாங்கள் அபகரிக்கவேண்டும் என்ற நோக்கில் நான் தான் எதிரிகளிடம் தகராறு செய்து தவறான புகாரை அளித்துள்ளேன்

என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை, பக்கத்து வீட்டுகாரர்கள். இந்த சம்பவம் நடந்த பிறகு நான் எதிரிகளிடம் பிரச்சனை செய்ததாக எதிரிகள் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்து போலிசார் என்னை விசாரித்தனரா என்றால் விசாரித்தனர், நாங்கள் அதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்று கூறிவிட்டோம். நான் எதிரிகளுக்கு மனஉளைச்சல் கொடுத்து அவர்களை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கில் தவறுதலாக ஒரு புகார் அளித்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 491/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 28.11.2025.**

| | |
|---|---|
| **Name : சௌந்தர்யா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இலவம்பட்டியில் குடியிருந்து வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறார். நான் சண்டையை நேரில் பார்த்தேன். கடந்த 26.04.2025ம் தேதியன்று மதியம் 12 மணியளவில் வெளியே சத்தம் கேட்டு காட்டில் இருந்து பார்த்தேன். எதிரி சுப்ரமணி ஊதுகோலால் அ.சா.1ன் தலையிலும், கையிலும் அடித்தார். அந்த ஊதுகோலை அ.சா.1 தட்டிவிட்டார், அது கீழே விழுந்துவிட்டது. அந்த ஊதுகோலை எடுத்து ராணி அ.சா.1ன் கையின் மேல் அடித்தார். முருகனும், செல் வராஜும், அ.சா.1 ன் கையை பிடித்து கொண்டார்கள். முருகன் அ.சா.1ன் முதுகில் கையால் அடித்தார்.
2) செல்வராஜ் என்பவர் அ.சா.1ன் நெஞ்சின் மீது கையை வைத்து கீழே தள்ளிவிட்டார். நான் அருகில் சென்று பார்த்தேன். அ.சா.1 அழுது கொண்டிருந்தார். எதிரிகள் அ.சா.1 யை கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். அ.சா.1ன் கணவர் வந்து அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக என்னிடம் சொன்னார். போலிசார் 10.05.2025 தேதியன்று என்னை விசாரித்தனர். ஆஜர் எதிரிகள் தான் அ.சா.1 யை அடித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) செல்வராஜ் மற்றும் முருகன் ஆகியோர் அ.சா.1ன் கையை பிடித்து கொண்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் யார் யார் எந்த கையை பிடித்து கொண்டனர் என்றால் முருகன் என்பவர் இடது கையையும், செல்வராஜ் என்பவர் வலது கையையும் பிடித்து கொண்டனர். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் சம்பவம் இடத்திலிருந்து 10.05.2025 தேதியன்று விசாரித்தனர்.

4) நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். 2ம் எதிரி கீழே இருந்த ஊதுகோலை எடுத்து தான் அடித்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து பாக்கியவதி வீட்டிற்கு எவ்வளவு தூரம் உள்ளது என்றால் இரண்டு வீடுகள் தள்ளி உள்ளது. பாக்கியவதி என்பவர் எங்கிருந்து சம்பவத்தை பார்த்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 க்கு எங்கெங்கு காயம் ஏற்பட்டது என்றால் நான் காயத்தை பார்க்கவில்லை, தலையிலும், கையிலும் வீக்கம் இருப்பதாக கூறினார்.

5) அ.சா.1 எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றார் என்றால் நான் வீட்டிற்கு சென்று விட்டேன் அதனால் எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை தடுக்க முயற்சி செய்யவில்லையா என்றால் நான் பயத்தின் காரணமாக செல்லவில்லை. நான் எவ்வளவு தொலைவில் இருந்து சம்பவத்தை பார்த்தேன் என்றால் 100 அடி தொலைவில் இருந்து பார்த்தேன். 100 அடி தொலைவில் இருந்து ஒருவர் பேசுவது கேட்கமுடியாது என்று சொன்னால் சரிதான்.

6) நான் தொலைவில் இருந்தேன் எதிரி பேசியதை கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான் நான் சம்பத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, எதிரிகள் மீது இருந்த முன்விரோதம் காரணமாக தவறுதலாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.